# தமிழ்நாடு 2000ஆம் ஆண்டு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்திற்கான (தமிழ்நாடு சட்டம் 7/2001) விதிகள்

## அறிவிக்கை

தமிழ்நாடு 2000ஆம் ஆண்டு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2001) 50ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் விதிகளை இதனால் இயற்றுகிறார் :-

## விதிகள்

1. **குறுந்தலைப்பு :** இந்த விதிகள், தமிழ்நாடு 2002ஆம் ஆண்டு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மை சட்ட விதிகள் எனப் பெயர் பெறும்.

2. **பொருள் வரையறைகள் :** (1) இந்த விதிகளில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றபடி :-

(a) "சட்டம் " என்பது, தமிழ்நாடு 2000ஆம் ஆண்டு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/2001) எனப் பொருள்படும்;

(b) "ஆணையாளர்" என்பவர், இச்சட்டத்தின் 41ஆம் பிரிவின் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி எனப் பொருள்படுவார்;

(c) "தகுதி வாய்ந்த அதிகாரி" என்பவர், இச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி எனப் பொருள்படுவார்;

(d) "படிவம்" என்பது. இந்த விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் எனப் பொருள்படும்;

(e) "ஒப்படைத்தல்" என்பது.

(i) முதன்மைக் கால்வாயின் கீழ் வருகின்ற பாசன ஏரிகள் போன்ற சிறிய பாசன ஆதாரங்கள் உட்பட கிளைக் கால்வாய்கள், நீர்வழிகள், ஆகியவற்றை உள்ளடக்கிய நீர் பகிர்வு ஏற்பாடு முழுவதையும்; இயக்கும், பராமரிக்கும் பொறுப்புகளை ஒப்படைத்தல் எனப் பொருள்படும்.

(ii) மற்றும் விவசாயிகள் அமைப்பின் அதிகார வரம்பிற்குட்பட்ட கண்ணி வாய்கால்கள் மற்றும் சிறு வடிகால்களை இயக்கி பராமரிக்கும் பொறுப்புகளை ஒப்படைத்தல் எனப் பொருள்படும்.

(2) இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டு ஆனால் பொருள் விளக்கம் அளிக்கப்படாத சொற்கள், மேற்படி சட்டத்தில் அவ்வவற்றுக்கென்று அளிக்கப்பட்டுள்ள அதே பொருள்களைக் கொண்டிருக்கும்.

3. நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பாசனப் பகுதியை வரையறுத்தல் : (1) மாவட்ட ஆட்சியர், முதலில் தனிப்பட்ட பாசன ஏற்பாடுகளின் நீரியல் எல்லைகளின் ஒட்டுமொத்த அடிப்படையில், மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள பொதுப் பணித்துறையின் நீர் ஆதாரங்கள் அமைப்பினுடைய நிர்வாகத்தின் கீழ் வருகின்ற அனைத்துப் பாசன ஏற்பாடுகளையும் சேர்ந்த பாசனப் பகுதி முழுவதையும் "நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதியாக" படிவம் I-ல் அறிவிக்க வேண்டும்.

(2) ஆட்சி மண்டலத் தொகுதிகளின் (Territorial Constituencies) எல்லைகளைக் குறிப்பிட்டு, நீரியல் பகுதிகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர், இறுதியாக வரையறுக்க இயலும் வகையில், மேற்படி சட்டத்தின் 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (2) உட்பிரிவுகளின்படி ஒவ்வொரு பாசன அமைப்பின் கீழும் அறிவிக்கப்பட்ட நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதிக்குள் அமைந்துள்ள தனிப்பட்ட நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் விரிவான ஆயக்கட்டு நிலப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

(3) மாவட்ட ஆட்சியர், மாவட்டத்திற்குள் அமைந்துள்ள ஒவ்வொரு பாசன அமைப்பின் கீழ் வருகின்ற பாசனப் பகுதியிலுள்ள நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் செயல்பாட்டுப் பகுதியை (Operational area) நீரியல் எல்லையின் அடிப்படையில் வரையறுக்க வேண்டும்,

அத்தகைய வரையறை, இந்த விதிகளில் இணைக்கப்பட்டுள்ள படிவம் II-குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் வெளியிடப்பட வேண்டும்.

எனினும் இவ்வாறு படிவம் II-ல் வெளியிடப்பட்ட வரையறைகளை அந்த மாவட்ட ஆட்சிய தன்னிச்சையாக அல்லது அவருக்கு வரப்பெற்ற விண்ணப்பத்தின் பேரில் திருத்தியமைக்கலா அல்லது சரிசெய்யலாம். அவ்வாறு திருத்தியமைப்பதற்கான அல்லது சரி செய்வதற்கா காரணங்களை அவர் பதிவு செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்:-

(i) பாசனப் பகுதியில் அமைந்துள்ள முதன்மைக் கால்வாய், கிளைக் கால்வாய், கண்ண வாய்க்கால்கள் மற்றும் தொடர்புடைய கட்டுமானங்கள் போன்ற கால்வாய் ஏற்பா( கிராம எல்லைகள், வடிகால்கள், ஆயக்கட்டு சாலைகள், மற்றும்

(ii) ஒவ்வொரு கிளைக் கால்வாய், கிளை வாய்க்கால், கண்ணி வாய்க்கால் மற்று பாசன ஏரிகளின் கீழ் பாசனம் அளிக்கப்படும் அல்லது பாசனம் அளிக்கத் திட்டமிட பட்டுள்ள பகுதியின் நில அளவை எண் வாரியான பட்டியல் ஆகியவற்றைக் குறிப்பிட் ஒவ்வொரு பாசன அமைப்பிற்குரிய வரையறுக்கப்பட்ட நிலப் படங்கள் அல்ல வரைபடங்களைத் தயாரிக்கச் செய்ய வேண்டும்.

(4) (a) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றும் ஆயக்கட்டின் பெரும்பான்மைப் பர அமைந்துள்ள கிராமம் ஒன்றின் பெயரை அதன் தனிப்பட்ட பெயராகக் கொண்டிருக் வேண்டும். (அல்லது சம்பந்தப்பட்ட நீரினைப்பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்க ஒருமித்த கருத்தின் பேரில் முடிவு செய்த வேறு ஏதேனும் பெயரைக் கொண்டிருக் வேண்டும்). ஒரு கிராமத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நீரினைப் பயன்படுத்துவோர் சங்க இருந்தால், அத்தகைய சங்கம், அதன் தனிப்பட்ட பெயருடன் எண்களைச் சேர்த் அழைக்கப்பட வேண்டும். பாசன ஏரிகளைப் பொறுத்த வரையில், ஆயக்கட்டுதாரர்க ஒருமித்த கருத்தின் அடிப்படையில் ஏரியின் பெயரை நீரினைப் பயன்படுத்துவே சங்கத்திற்கு இடலாம் என்று முடிவு செய்தால் அந்த ஏரியின் பெயரால் அந்த நீரினை பயன்படுத்துவோர் சங்கம் அழைக்கப்படலாம்.

(b) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றின் பாசனப் பகுதிக்குமென ஒதுக்கீ செய்யப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட நீரை வழங்குவதற்காக, அத்தகைய ஒவ்வொ பாசனப் பகுதிக்கும் தனிப்பட்ட பாசன அமைப்புப் பிரிவு ஒன்று இருக்க வேண்டும். அதற்கா கட்டுப்பாட்டு அமைப்பு அல்லது இயந்திர அமைப்பு அதன் தலைப் பகுதியில் இருக் வேண்டும்.

(c) அத்தகைய வரையறுக்கப்பட்ட பகுதி அதற்குப் பாசனம் அளிக்கின்ற கிளைக் கால்வா அல்லது நீரியல் எல்லையின் அடிப்படையில் ஏற்றவாறு பிரிக்கப்பட்ட பெரிய கிளை கால்வாய், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிளைக் கால்வாய்கள் அல்லது நே( மதகுகள் அல்லது இவை சேர்ந்த பாசன அமைப்பைக் கொண்டிருக்கலாம். அத எல்லை தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும், இந்த எல்லை ஒரு வடிகாலாக அல்ல ஒரு கரையாக அல்லது பாசனம் அளிக்க இயலாத நிலமாக இருக்கலாம்.

(d) (i) பெரிய மற்றும் நடுத்தர பாசன அமைப்புகளைப் பொறுத்த வரையில் அவ்வா வரையறுக்கப்பட்ட நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதிகள் ஒன்றுக்கு மேல் இருக் வேண்டும்,

(ii) சிறிய பாசன அமைப்புகளைக் குறிப்பாக பாசன ஏரிகளைப் பொறுத்த வரையில் நீரினை பயன்படுத்துவோர் சங்கம் ஒன்றுக்கான குறைந்த பட்ச பகுதி 150 முதல் 200 எக்ட வரையிலானதாக இருக்க வேண்டும், இதன் பொருட்டு, சிறிய ஏரிகளை உரியவா ஒன்றாக இணைக்கலாம்.

(iii) ஏரிப் பாசன அமைப்புகளைப் பொறுத்தவரை, கிராம எல்லைக்குட்பட்ட குறைந்தது எக்டேர் பரப்புள்ள நிலம், பராமரித்து வரப்பட வேண்டும், மற்றும் அவற்றைத் தக்கவா ஒன்றிணைத்து நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதி ஒன்றை ஏற்படுத்தலாம்

(e) எளிதாக நிர்வகிக்க வசதியாக நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் செயல்பாட்டு பகுதி, இயன்றவரை ஒரு கிராம எல்லைக்குள் அல்லது ஒரு வட்டத்திற்குள் அடுத்தடுத் அமைந்துள்ள கிராமங்களின் எல்லைகளுக்குள் இருக்க வேண்டும். விதி விலக்கா நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் பகுதி ஒன்றுக்கு மேற்பட்ட வட்டம் அல்ல மாவட்டங்களில் பரந்திருக்கலாம்.

(5) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதி ஒவ்வொன்றையும் பத்துக்கும் மேற்படாத ஆட்சி மண்டலத் தொகுதிகளாகப் பிரித்துத் (இயன்ற வரை இவை சம அளவினதாக இருக்க வேண்டும்) தயாரிக்கப்பட்ட பாசனப் பகுதி நிலப்படம் அல்லது வரை படம் ஒன்று மாவட்ட ஆட்சித்தலைவரிடம் இருக்க வேண்டும்.

(6) துணை விதி (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலப் படங்கள் அல்லது வரைபடங்கள் வரையறுக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு ஆட்சி மண்டலத் தொகுதியிலும் அமைந்துள்ள நிலங்களின் நில அளவை எண்கள் குறித்த விவரங்களுடன் நில உரிமையாளர்களின் தகவலுக்காக, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் அறிவிப்பு பலகையில் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும்.

(7) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதியை வரையறுத்ததற்கு அல்லது தொகுதிகளைப் பிரித்ததற்கு எதிர்த்து மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனும் இருக்குமாயின், அவற்றை, மேற்கண்ட நிலப்படம் (அல்லது) வரைபடம் அறிவிப்பு பலகையில் பார்வைக்காக வைக்கப்பட்ட நாள் நீங்கலாக ஏழு நாட்களுக்குள் பாசனப் பகுதியிலுள்ள நில உடமையாளர்களால், மாவட்ட ஆட்சியர் முன்பு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(8) மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் வரப் பெற்றதன் பேரில் மாவட்ட ஆட்சியர் இரண்டு வார கால அளவிற்குள் சுருக்க விசாரணை நடத்தி நிலப்படங்கள் அல்லது வரைப்படங்களில் தேவையானதெனக் கருதப்படும் மாற்றங்கள் அல்லது திருத்தங்களைச் செய்யலாம்; அப்போது, அவற்றிற்கான காரணங்களை உரியவாறு பதிவு செய்தல் வேண்டும் மற்றும் இதில் அவர் எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

(9) இறுதியான நிலப்படம் அல்லது வரைப்படத்தை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உடனடியாக உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

(10) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் செயல்பாட்டுப்பகுதி ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் அமைந்திருக்குமாயின் அத்தகைய பகுதிகளில் ஒரு மாவட்ட ஆட்சியர் அதிகாரங்களைச் செலுத்தி கடமைகளை ஆற்ற வேண்டுமென்றும் ஆணையாளர் உத்தரவிடலாம்.

4. நில உரிமையாளர்கள் பட்டியல், வாக்காளர்கள் பட்டியல் மற்றும் நீரினைப் பயன்படுத்துவோர் பட்டியல் ஆகியவற்றைத் தயாரித்தல்

(1) படிவம் V-ல் உள்ள உடமை உரிமை ஆவணங்களின் அடிப்படையில், நில உரிமையாளர்களின் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர் தயாரிக்க வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட பட்டியலின் அடிப்படையில், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் மேலாண்மைக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்வு செய்வதற்காக, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதியில் தேர்தல்கள் நடத்துவதற்கான அறிவிக்கை, வெளியிடப்படும் நாளில் பதினெட்டு வயது நிரம்பிய நில உரிமையாளர்களடங்கிய வாக்காளர் பட்டியல் ஒன்றை V-A படிவத்தில் ஆட்சி மண்டலத் தொகுதி வாரியாக அவர் தயாரிக்க வேண்டும்.

(2) (1) துணை விதியின் கீழ் தயாரிக்கப்பட்ட பட்டியல்கள், சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும்.

(3) (1) துணை விதியில் குறிப்பிடப்பட்ட பட்டியலை இறுதி செய்வதற்கு முன்னர், மாவட்ட ஆட்சியர் எவர் ஒருவரின் பெயரையேனும் சேர்ப்பதற்கு எதிரான மறுப்புரைகள் எவையேனும் உண்டா என கோரிப் பெற வேண்டும்; மற்றும் மேற்சொன்ன வாக்காளர் பட்டியலில் யாதொரு பெயரையும் சேர்ப்பது குறித்து மறுப்புரை ஏதேனுமிருப்பின் அது படிவம் VI-ல் அனுப்பப்பட வேண்டும். மேற்சொன்ன வாக்காளர்கள் பட்டியலில் பெயரைச் சேர்ப்பதற்காக அல்லது நீக்கம் செய்வதற்கான கோரிக்கை நேர்விற்கேற்ப, முறையே படிவம் VII மற்றும் படிவம் VIII-ல் இருக்க வேண்டும். அத்தகைய மறுப்புரைகள் அனைத்தையும் மாவட்ட ஆட்சியர் ஒரு வார கால அளவிற்குள் கருதிப் பார்த்து நீக்கப்பட வேண்டிய அல்லது சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்களின் பெயர்களை ஒவ்வொரு பட்டியலின் இறுதியில் இணைப்பாகச் சேர்த்து அத்தகைய பட்டியல்களை இறுதி செய்ய வேண்டும், மற்றும் வாக்காளர் பட்டியல் தொடர்பான இறுதி அறிவிப்பு ஒன்று படிவம் IX-ல் வெளியிடப்பட்டு, சரி பார்க்கப்படுவதற்காக கிடைக்கச் செய்ய வேண்டும்.

(4) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தில் நில உரிமையாளராக உள்ள ஒவ்வொருவருக்கும், மேற்சொன்ன பகுதியில் எவ்வளவு நிலம் இருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரேயொரு வாக்கு மட்டுமே உண்டு. ஒன்றிற்கு மேற்பட்ட நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களில் ஆயக்கட்டு நிலங்களை வைத்திருப்பவர் அத்தகைய சங்கங்கள் அனைத்திலும் வாக்களிக்கும் உரிமையை பெற்றிருந்தாலும் அவற்றுள் ஏதேனும் ஒன்றில் ஒரேயொரு அலுவல் பதவியை மட்டுமே வகிக்க முடியும்.

(5) (அ) நில உரிமையாளர் ஒருவர் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதியில் வருகின்ற ஒன்றுக்கும் மேற்பட்ட ஆட்சி மண்டலத் தொகுதியில் நிலம் வைத்திருந்தால், படிவம் X-ல் குறிப்பிடப்பட்டவாறு, மாவட்ட ஆட்சியருக்கு அறிவிப்பு ஒன்றைக் கொடுப்பதன் மூலம், வாக்களிக்க ஒரேயொரு தொகுதியை மட்டுமே தெரிவு செய்ய வேண்டும்.

(ஆ) நில உரிமையாளர் அவ்வாறு தொகுதி எதையும் தெரிவு செய்யவில்லை என்றால், மாவட்ட ஆட்சித்தலைவர், அந்த நில உரிமையாளருக்கு எந்தத் தொகுதியில் அதிக நிலம் இருக்கிறதோ அத் தொகுதிக்கு அவருடைய வாக்கை ஒதுக்க வேண்டும். இரண்டு ஆட்சி மண்டலத் தொகுதிகளில் அவர் வைத்துள்ள நிலத்தின் பரப்பளவு ஒரே அளவாக இருக்குமாயின், ஏதேனும் ஒரு தொகுதியை அவருக்கு வாக்களிக்க ஒதுக்கலாம். இது தொடர்பாக அவருடைய முடிவே இறுதியானதாகும்.

(6) (1) துணை விதியின் கீழ், தயாரிக்கப்பட்ட பட்டியல்கள், தேர்தல் தொடங்குவதற்கு 6 மாத காலத்திற்கு முன்னர் (1) முதல் (5) வரையிலான துணை விதிகளில் குறிப்பிட்டவாறு திருத்தப்பட வேண்டும்.

5. வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கான மேல் முறையீடு

4-ஆம் விதியின் கீழ், தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் தொடர்பாக யாதொரு நபர் முரண்பாடு எவற்றையேனும் கண்டறிவாரேயானால், அத்தகைய நபர், ஆணையரிடம் மேல் முறையீடு ஒன்றைச் செய்து கொள்ளலாம். அவருடைய முடிவே இறுதியானதாகும்.

6. பகிர்மானக் குழுப் பகுதியை வரையறுத்தல்

(1) செயல்பாட்டு சாத்தியக் கூறுகளைக் கருத்தில் கொண்டும் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசனை செய்த பின்னரும் நீர் பகிர்மானக் குழுவை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக அரசு, பெரிய பாசன, மற்றும் நடுத்தரப் பாசன அமைப்பு முறையின்கீழ் பாசனம் பெறும் பகுதியை படிவம் III-ல் வரையறுத்து அவற்றை தாம் சரியெனக் கருதும் பகிர்மானக் குழுப் பகுதிகளாக அறிவிக்கலாம்.

(2) பகிர்மானக் குழுப் பகுதியை வரையறுக்கும் போது, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பகுதி எவற்றையும் பிரிக்கவோ அல்லது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கவோ கூடாது.

7. திட்டக் குழுப் பகுதியை வரையறுத்தல்

அரசு செயல்பாட்டுச் சாத்தியக் கூறுகளைக் கருத்தில் கொண்டும், மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்தாலோசனை செய்த பின்னரும், பெரிய பாசன அமைப்பு முறையின் கீழ் வருகின்ற பாசனம் பகுதியை அல்லது அதன் ஒரு பகுதியை வரையறுக்கலாம் மற்றும் அப் பகுதிகளை இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் IV-ல் ஒரு திட்டப் பகுதியாக அறிவிக்கலாம்.

8. உச்ச நிலையிலான குழு அமைப்பும் அதன் அலுவல்களும்

(1) உச்ச நிலையிலான குழு, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களைக் கொண்டிருக்கும்:—

(i) அரசால் பெயர் குறிப்பிட்டு நியமனஞ் செய்யப்பட்ட தலைவர் ; மற்றும்

(ii) பின்வரும் உறுப்பினர்கள், அதாவது :—

(a) அனைத்துத் திட்டக் குழுக்களின் தலைவர்கள் (பதவி நிலையால்)

(b) நான்கு மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் நீர் வள ஆதாரங்கள் அமைப்பின் தலைமைப் பொறியாளர்கள், வேளாண் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர், வேளாண்மைத் துறையின் இயக்குநர் ஆகியோர்

(c) அரசால் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்பட வேண்டிய தெரிவு செய்யப்பட்ட அரசு சாராத அமைப்புகளைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டிருக்கும்.

(2) (i) 12-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட குழு, சட்டத்தின் விதித் துறைகளைச் செயற்படுத்துவதற்கான வழிகாட்டிக் குறிப்புகளை வகுப்பதற்குத் தேவையான அதிகாரங்களைச் செயற்படுத்தும் அலுவல்களை ஆற்றும்.

(ii) சட்டத்தின் விதித்துறைகளுக்கு இணங்க அவற்றின் அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கும், அலுவல்களை ஆற்றுவதற்கும் தேவையெனக் கருதப்படுகின்ற உத்தரவுகளைத் தலைமைக் குழு, யாதொரு விவசாயிகள் அமைப்பிற்கு பிறப்பிக்கலாம்.

9. உச்ச நிலையிலான குழுவின் கூட்டங்கள் : (1) உச்ச நிலையிலான குழு, குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும், இருப்பினும், தேவை ஏற்படுமாயின் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்படலாம், உச்ச நிலையிலான குழுவின் தலைவர், கூட்டங்களுக்குத் தலைமை தாங்க வேண்டும்.

(2) உச்ச நிலையிலான குழுவின் கூட்டத்தை நடத்துவதற்கு ஏழு நாட்களுக்கு முன் கூட்டியே அறிவிப்பு அளிக்கப்பட வேண்டும்;

(3) ஏதேனும் காரணத்திற்காக, உச்ச நிலையிலான குழுவின் தலைவர், கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாவிடில் உச்ச நிலையிலான குழுவின் மூத்த முதுநிலை உறுப்பினர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க வேண்டும்.

10. உச்ச நிலையிலான குழுக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு (Quorum)

(1) உச்ச நிலையிலான குழுவின் அனைத்துக் கூட்டங்களையும் நடத்துவதற்குத் தேவையான உறுப்பினர்களின் குறைவெண் வரம்பு மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காகும், கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கும் பெரும்பான்மை உறுப்பினர்களால் அனைத்துத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்.

(2) கூட்டத்திற்குத் தேவையான குறைவெண் வரம்பு இல்லையெனில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, கூட்டத்தை நடத்துவதற்கு முதலில் ஏற்பாடு செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று நாள்களுக்கு மேற்படாத ஒரு நாளில் மற்றும் நேரத்தில் கூட்டம் மீண்டும் நடத்தப்பட வேண்டும்.

(3) ஒத்திவைக்கப்பட்ட உச்ச நிலையிலான குழுவின் கூட்டத்திற்கு குறைவெண் வரம்பு தேவையில்லை. கூட்டத்தில் கலந்து கொண்டு, வாக்களிக்கும் பெரும்பான்மை உறுப்பினர்களால் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம்.

(4) கோரிக்கையின் பேரில் கூட்டப்பட்ட உச்ச நிலையிலான குழுவின் கூட்டம் ஒன்றில் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் பற்றி மட்டுமே பொதுவாக விவாதிக்கப்பட வேண்டும். ஏனைய பொருட்கள் குறித்து தலைவரின் திட்டவட்டமான அனுமதியுடன் மட்டுமே விவாதிக்கப்படும்.

11. கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள்

உச்ச நிலையிலான குழுவின் ஒவ்வொரு நடவடிக்கையும், அதற்கென வைத்து வரப்படும் நடவடிக்கைக் குறிப்புப் பதிவேட்டில் பதிவு செய்து கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் தலைவரால் சான்றளிக்கப்படவேண்டும்.

12. திரும்ப அழைப்பதற்கான தீர்மானம்

(1) நிருவாகக் குழுவின் தலைமையாளர் அல்லது தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவரைப் பொறுத்த வரையில் அவர்களை ஏதேனும் ஓர் விவசாயிகள் அமைப்பு திரும்ப அழைப்பதற்கான அறிவிப்பு வெளியிடுவதற்கு அதிகாரம் பெற்ற அதிகாரி, மாவட்ட ஆட்சியர் ஆவார்.

(2) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒன்றின் நிருவாகக் குழுவின் தலைவர் அல்லது ஒரு உறுப்பினரைப் பொறுத்த வரையில், மூன்றில் ஒரு பங்கு வாக்காளர்களும் பகிர்மானக் குழுவின் அல்லது திட்டக் குழுவைச் சேர்ந்த நிருவாகக் குழுவின் தலைவர் அல்லது தலைமையாளர் அல்லது உறுப்பினரைப் பொறுத்த வரையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களும் படிவம் XI-ல் உள்ள திரும்ப அமைப்பதற்கான அறிவிப்பில் கையொப்பமிட வேண்டும்.

(3) அத்தகைய அறிவிப்பு கிடைக்கப் பெறுவதன் பேரில், மாவட்ட ஆட்சியர், படிவம் XII-ல் அறிவிப்பை உரியவாறு சரிபார்க்கச் செய்ய வேண்டும்.

(4) மாவட்ட ஆட்சியர், அறிவிப்புச் சரி பார்க்கப்பட்ட பின்னர், 7 நாள்களுக்குள், நேர்விற்கேற்ப, சம்பந்தப்பட்ட விவசாயிகள் அமைப்பின் பொதுக் குழுவைச் சேர்ந்த வாக்காளர்களின் அல்லது உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்க வேண்டும்.

(5) கூட்டத்தில் கலந்து கொள்ளும் பெரும்பான்மையான வாக்காளர்கள், திரும்ப அழைக்கும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்கும் நேர்வில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(6) அதன் பின்னர், மாவட்ட ஆட்சியர், தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து சம்பந்தப்பட்ட விவசாயிகள் அமைப்பின் தலைமையாளர் / தலைவர் அல்லது உறுப்பினரைத் திரும்ப அழைப்பது செயலுக்கு வந்துள்ளது என்று தெரிவித்து, திரும்ப அழைப்பது குறித்த செயல்முறை ஆணைகளை அவருக்கு உடனடியாக பிறப்பிக்க வேண்டும். அதன்படி அவர் அத்தகைய பதவிவகிப்பது அற்றுப்போகும்.

13. **துணைக் குழுவின் அமைப்பும் அதன் அலுவல்களும்**

துணைக் குழுவின் அமைப்பும் அதன் அலுவல்களும் பின்வருமாறு இருக்க வேண்டும் :—

(1) நிருவாகக் குழு ஒதுக்கீடு செய்கின்ற குறிப்பிட்ட அலுவல்களைக் கவனிப்பதற்காக, விவசாயிகள் அமைப்பின் நிருவாகக் குழு குறிப்பிட்ட துணைக் குழுக்களை ஏற்படுத்தலாம்.

(2) ஒவ்வொரு விவசாயிகள் அமைப்பும் பின்வரும் துணைக் குழுக்களை ஏற்படுத்தலாம் :—

(i) நிதி மற்றும் நிதி ஆதாரங்கள் துணைக் குழு

(ii) பணிகள் துணைக் குழு

(iii) நீர் நிருவாக துணைக் குழு

(iv) கண்காணிப்பு, மதிப்பீட்டாய்வு மற்றும் பயிற்சி துணைக் குழு

(3) ஒவ்வொரு துணைக் குழுவும் ஒரு கூட்டுநரையும் (convener) நான்கு உறுப்பினர்களையும் கொண்டிருக்க வேண்டும்.

(4) (i) கூட்டுநர் ஒருவர் நிருவாகக் குழுவின் தலைமையாளர் / தலைவர் அல்லாத ஒரு உறுப்பினராக இருக்க வேண்டும்.

(ii) திட்டக் குழுவைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு துணைக் குழுவிற்கும் அத்திட்டப் பகுதியிலுள்ள நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவர்களிடையேயிருந்து நான்கிற்கு மேற்படாத உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

(iii) பகிர்மானக் குழுவைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு துணைக் குழுவிற்கும் பகிர்மானக் குழுவின் பொதுக் குழுவிலிருந்து அல்லது நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் அதிகார வரம்பிற்குள் உள்ள ஆட்சி மண்டலத் தொகுதிகளிலிருந்து (Territorial Constituencies) நான்கிற்கும் மேற்படாத உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

(iv) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு துணைக் குழுவிற்கும் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ள நில உரிமையாளர்களிடமிருந்து நான்கிற்கும் மேற்படாத உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

(5) சம்பந்தப்பட்ட அடுக்குக் குழுவின் பொதுக் குழுவில் துணைக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும்.

(6) உறுப்பினர் எவரும், ஒன்றுக்கு மேற்பட்ட துணைக் குழுவில் இடம் பெறக் கூடாது.

(7) மேற்சொன்ன ஏற்பாட்டின் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தேவைக்கும் குறைவாக இருக்குமாயின் சம்பந்தப்பட்ட நிருவாகக் குழுவின் தலைமையாளர் / தலைவர், ஆட்சி மண்டலத் தொகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்களை உறுப்பினர்களாக இசைந்து சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனால், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் எல்லை ஆட்சி மண்டலத் தொகுதியைச் சேர்ந்த ஒன்றினுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் துணைக் குழுவில் உறுப்பினர்களாக இசைந்து (Co-opt members) சேர்த்துக் கொள்ளப்படக் கூடாது.

(8) துணைக் குழுக்களின் அலுவல்கள் வருமாறு:—

(i) <u>நிதி மற்றும் நிதி ஆதாரங்கள் துணைக் குழு</u>

(a) நிதி ஆதாரங்களைத் திரட்டுதலும் வசூலித்தலும்,

(b) சட்டத்தின் 25ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டவாறான உறுப்பினர்களிடமிருந்து வரவேண்டிய தொகைகள் வசூலிக்கப்படுவதை உறுதி செய்தல்,

(c) நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவது குறித்தும் அவற்றை மறு பங்கீடு செய்வது குறித்தும் நிருவாகக் குழுவிற்குப் பரிந்துரைத்தல்,

(d) நிதி விவகாரங்கள் தொடர்பான பதிவுருக்களை வைத்து வருதல்.

(ii) <u>பணிகள் துணைக் குழு</u>

(a) பணிகளின் மதிப்பீடுகளை நிருவாக ஒப்புதலுக்கு பரிந்துரைத்தல்,

(b) பணிகளை மேற்பார்வை செய்தலும் தரக்கட்டுப்பாட்டை உறுதி செய்தலும்,

(c) பணிகளுக்குத் தொகை வழங்க ஒப்புதல் அளித்தல்.

(iii) <u>நீர் நிருவாகத் துணைக் குழு</u>

(a) நீர் வழங்கலை முறைப்படுத்துதல், நீர் திறந்துவிடுவதற்கான கால அட்டவணை ஆகியவை குறித்து நிருவாகக் குழு மற்றும் பொதுக் குழு எடுக்கும் முடிவுகளை நிறைவேற்றுதல்,

(b) கால்வாய்கள், வாய்க்கால் ஆகியவற்றின் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்தலும் நீரின் பயன்பாட்டை முறைப்படுத்தலும்,

(c) பாசனம் மற்றும் வடிகால் ஏற்பாட்டு முறையை முறையாக சோதனை செய்தல்,

(d) நீர் வழங்கல்களைப் பதிவு செய்தல்,

(e) நீரினைப் பயன்படுத்துவதில் காணப்படும் ஏதேனும் விதி மீறல்கள் குறித்து நிருவாகக் குழுவிற்கு தகவல் அளித்தல்,

(f) நில உரிமையாளர்கள் மற்றும் நீர் பயன்படுத்துவோர்கள் குறித்த பதிவுருக்களை வைத்து வருதல்.

(iv) <u>கண்காணிப்பு, மதிப்பீட்டாய்வு மற்றும் பயிற்சித் துணைக்குழு</u>

(a) நீரினைப் பயன்படுத்துவோருக்குத் தேவையான பயிற்சிகளை இனங்கண்டறிதலும் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தலும்,

(b) நீரை உரிய அளவுக்குப் பயன்படுத்துவது குறித்து பயிற்றுவித்தல்,

(c) பாசனமளிக்கப்பட்ட பகுதி, உற்பத்தித் திறன், தகராறுகளுக்குத் தீர்வு காணுதல், நிதி ஆதாரங்களை உருவாக்குதல் ஆகியவை போன்ற குறிப்பிட்ட இனங்களைக் கண்காணித்தல்

(9) துணைக்குழு தேவைக்கேற்ப அடிக்கடி கூட வேண்டும். துணைக் குழுவின் கூட்டுநர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி, விவாதங்கள் மற்றும் அவற்றின் மீதான முடிவுகள் குறித்த பதிவுருவை வைத்து வர வேண்டும்.

(10) துணைக் குழுக்கள், சம்பந்தப்பட்ட அமைப்பின் நிருவாகக் குழுவின் தலைமையாளர் / தலைவரின் பொதுவான கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் நெறிப்படுத்தலின் கீழ் செயல்பட வேண்டும்.

14. <u>விவசாயிகள் அமைப்பில் மாறுதல்கள்:</u>

(1) சட்டத்தின் 16 ஆம் பிரிவிலுள்ள விதித்துறைகளின்படி, அறிவிக்கப்பட்ட விவசாயிகள் அமைப்பில் மாற்றங்கள் எவையேனும் தேவைப்படுமாயின் அது குறித்து அரசு ஆய்வு செய்ய வேண்டும்.

(2) எல்லை ஆட்சி மண்டலத் தொகுதியின் பாசனப் பகுதியின் பரப்பு, எல்லைகள், பாசனப் பகுதியை மறுதொகுதிப் படுத்துதல் ஆகியவை தொடர்பாக அல்லது ஏதேனும் மாற்றம் மற்றும் ரத்து தொடர்பாக, ஏதேனும் மாற்றங்கள் செய்வது அவசியம் என்று வரையறுக்கப்பட்ட விவசாயிகள் அமைப்பு கருதுமாயின் அது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படலாம்.

(3) தெரிவிக்கப்பட்ட மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்த பின்னர் அரசு அவை குறித்து முடிவு செய்ய வேண்டும்.

15. <u>காலியிடங்களை நிரப்புதல் :</u>

தகுதியின்மை காரணமாக அல்லது மரணம் அல்லது பதவி விலகல், திரும்ப அழைக்கப்படுதல் காரணமாக அல்லது ஏதேனும் காரணத்திற்காக ஏதேனும் விவசாயிகள் அமைப்பில் காலியிடம் ஒன்று ஏற்படுமாயின், பின்வரும் முறையில் அந்தக் காலியிடம் நிரப்பப்படவேண்டும்.

(a) (i) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவர் பதவி ஒன்றில் காலியிடம் ஏற்படுமாயின், அந்த நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் இடம்பெற்றுள்ள பகிர்மானக் குழுவின் தலைவர், பகிர்மானக் குழுவைச் சேர்ந்த தற்போதுள்ள நிருவாகக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் தலைவராக பெயர் குறிப்பிட்டு நியமிக்க வேண்டும்.

(ii) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தைச் சேர்ந்த நிருவாகக் குழுவின் உறுப்பினர் பதவி ஒன்று காலியாகுமாயின், பகிர்மானக் குழுவின் தலைவர், எந்தத் தொகுதியில் காலியிடம் ஏற்பட்டதோ அந்தக் குறிப்பிட்ட தொகுதியிலிருந்து நில உரிமையாளர்களில் எவரேனும் ஒருவரை நிருவாகக் குழுவின் ஓர் உறுப்பினராக பெயர் குறிப்பிட்டு நியமிக்க வேண்டும்.

(iii) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் மட்டும் இருக்கும் பாசன அமைப்பின் நேர்வில் காலியாக இருக்கும் தலைவர் பதவியிடத்திற்கு, ஒருமித்த கருத்தின் அடிப்படையில் நிருவாகக் குழு உறுப்பினர்களிடையேயிருந்து ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும். நிருவாகக் குழு உறுப்பினர் பதவியில் காலியிடம் ஏதேனும் ஏற்பட்டால், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் குறிப்பிட்ட தொகுதியிலுள்ள நில உரிமையாளர்களிடையேயிருந்து, ஒருவரை அப்பதவிக்கு பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்ய வேண்டும்.

(b) (i) திட்டக் குழுவின் தலைமையாளர் / தலைவர், பகிர்மானக் குழுத் தலைவர் பதவியிடம் காலி ஏற்படின், திட்டக் குழுவிலுள்ள நிருவாகக் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து ஒருவரை, பகிர்மானக் குழுவின் தலைவராக பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்ய வேண்டும்.

(ii) பகிர்மானக் குழுவைச் சேர்ந்த நிருவாகக் குழுவின் உறுப்பினர் பதவியில் காலியிடம் ஏற்படும் நேர்வில், பகிர்மானக் குழுவைச் சேர்ந்த திட்டக் குழுத் தலைமையாளர், பகிர்மானக் குழுவின் பொதுக் குழு உறுப்பினர்களில் ஒருவரை, உறுப்பினராக பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்ய வேண்டும்.

(iii) திட்டக் குழு இல்லாத நடுத்தரப் பாசன அமைப்பின் நேர்வில் காலியாகயிருக்கும் தலைவர் பதவியிடத்திற்கு, பகிர்மானக் குழுவின் நிருவாகக் குழு உறுப்பினர்களிடையேயிருந்து ஒருமித்த கருத்தின் அடிப்படையில் ஒருவரை அமர்த்த வேண்டும்.

(c) (i) திட்டக் குழுத் தலைமையாளர் பதவியில் காலியிடம் ஏற்பட்டால், உச்ச நிலையிலான குழு, திட்டக் குழுவைச் சேர்ந்த நிருவாகக் குழு உறுப்பினர்களிடையேயிருந்து ஒருவரை, பெயர் குறிப்பிட்டுத் தலைமையாளராக நியமிக்க வேண்டும்.

(ii) ஒரு திட்டக் குழுவைச் சேர்ந்த நிருவாகக் குழுவின் உறுப்பினர் பதவியில் காலியிடம் ஏற்பட்டால், உச்ச நிலையிலான குழு திட்டக் குழுவைச் சேர்ந்த பொதுக் குழு உறுப்பினர்களிடையேயிருந்து ஒருவரை, உறுப்பினராக பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்ய வேண்டும்.

ஆனால், இவ்வாறு பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட தலைமையாளர் (Chairman) தலைவர், அல்லது உறுப்பினர் சட்டத்தின் விதித்துறைகளுக்கிணங்க, புதிய தலைமையாளர், தலைவர் அல்லது உறுப்பினர் தெரிந்தெடுக்கப்படும் வரையில், முறையே தலைமையாளர், தலைவர் அல்லது உறுப்பினராகத் தொடர்ந்து நீடிப்பார்.

16. பொதுக் குழு : (1) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், பகிர்மானக் குழு, திட்டக் குழு ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், முறையே இச்சட்டத்தின் 4ஆம் பிரிவின் (3) உட்பிரிவு, 7ஆம் பிரிவின் (2) உட்பிரிவு, 10ஆம் பிரிவின் (2) உட்பிரிவு ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அனைத்து உறுப்பினர்களும் விவசாயிகள் அமைப்பின் பொதுக் குழுவில் இடம் பெறுவர்.

(2) இச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அதிகாரி, இப்பொதுக் குழுவிற்கு உதவுவார். இந்தத் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு, குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தன்னுடைய கருத்துக்களைப் பதிவு செய்ய உரிமையுண்டு; ஆனால், இவருக்கு வாக்களிக்கும் உரிமையில்லை.

17. பொதுக் குழுக் கூட்டங்கள் : (1) முதல் போகப் பயிர் பயிரிடுவதற்கு முன்னர் ஒரு முறையும், இரண்டாம் போகப் பயிர் பயிரிடுவதற்கு முன்னர் ஒரு முறையும் ஆக குறைந்தது ஆண்டிற்கு இரண்டு முறையேனும் இப்பொதுக் குழுக் கூட்டம் கூட வேண்டும். இக்குழுக் கூட்டத்திற்குத் தலைமையாளர் / தலைவர் தலைமை வகிப்பார்; அவர் இல்லாத நேர்வில், இந்நோக்கத்திற்காகவே தெரிந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழு உறுப்பினர்களில் ஒருவர் தலைமை தாங்குவார்.

(2) பொதுக் குழுக் கூட்டம், தலைவரால் அல்லது நிருவாகக் குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையோர் வாக்களித்து நிறைவேற்றும் ஒரு தீர்மானத்தின் மூலம் அல்லது விவசாயிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுள் வாக்களிக்கும் உரிமையுள்ள உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, விடுக்கும் எழுத்து மூலமான வேண்டுகோளின் பேரில் எந்த நேரத்திலும் கூட்டப்படலாம்.

(3) அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் தொடர்பாக, அரசிடமிருந்து அல்லது ஆணையாளரிடமிருந்து அல்லது விவசாயிகள் அமைப்பின் அடுத்த உயர் நிலையிலிருந்து ஆணை வரப்பெறுவதன் பேரிலும் பொதுக் குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

18. பொதுக் குழுவிற்கான அறிவிப்பு : 17-ஆம் விதியில் துணை-விதி (2) அல்லது துணை விதி (3)-ன் கீழ் அறிவிப்பு வரப்பெறுவதன் பேரில், பொதுக் குழுக் கூட்டம் நடத்தப்படும் நாள், நேரம், இடம் மற்றும் அதன் நிகழ்ச்சி நிரல் பற்றிய விவரங்கள் அடங்கிய அறிவிப்பை ஏழுநாள் முன் அறிவிப்புக் கொடுத்து 20 நாட்களுக்குள், விவசாயிகள் அமைப்பின் நிருவாகக் குழு, பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

(2) நேரில் / அஞ்சல் மூலம் / வெளியீடு மூலம் / டாம் - டாம் அடிப்பதன் மூலம், விவசாயிகள் அமைப்பின் அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைப்பதன் / பார்வைக்காக வைப்பதன் மூலம் அறிவிப்புக் கொடுக்கப்படலாம்.

19. பொதுக் குழுவிற்கான குறைவெண் வரம்பு (1) பொதுக் குழுவின் அனைத்துக் கூட்டங்களிலும், உறுப்பினர்களின் குறைவெண் வரம்பு, உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் இருக்க வேண்டும். மற்றும் பொதுக் குழுக் கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் வாக்களிப்பதன் மூலம், அனைத்துத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்.

(2) குழுக் கூட்டத்திற்குத் தேவையான குறைவெண் வரம்பின்படி உறுப்பினர்கள் இல்லையென்றால், குழுக் கூட்டத்தை ஒத்தி வைத்துவிட்டு கூட்டத்தைக் கூட்டுவதற்கு முதலில் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று நாள்களுக்கு மேற்படாத மற்றொரு நாள் மற்றும் நேரத்தில் குழுக் கூட்டத்தை மீண்டும் கூட்டலாம்.

(3) ஒத்திவைக்கப்பட்ட குழுக் கூட்டத்திற்குக் குறைவெண் வரம்பின்படி உறுப்பினர்கள் வந்திருக்க வேண்டும் என்ற தேவையில்லை. குழுக் கூட்டத்திற்கு வந்திருந்து வாக்களித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையைக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

(4) கோரிக்கையின் பேரில் கூட்டப்படும் பொதுக் குழு கூட்டத்தில், நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் மட்டுமே சாதாரணமாக விவாதிக்கப்படும். தலைமையாளர் / தலைவரின் திட்ட வட்டமான அனுமதியுடன் அல்லது குழுக் கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்களின் பெரும்பாலானோர் எடுக்கும் முடிவின் பேரில் வேறு எந்தப் பொருள் பற்றியும் விவாதிக்கப்படும்.

20. கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் : பொதுக் குழு கூட்டத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் அதற்கெனப் பராமரிக்கப்பட்டு வரப்படுவதும் தலைமையாளர் / தலைவர் அல்லது அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் ஒருவரால் அதிகாரப் பூர்வமானதெனச் சான்றளிக்கப்பட்டதுமான கூட்ட நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். இந்த நடவடிக்கைக் குறிப்பின் நகல் ஒன்று அடுத்த உயர் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

21. நிருவாகக் குழு : (1) நிருவாகக் குழுவின் கூட்டங்கள், இந்த நிறுவன அலுவலகத்தில் ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தது ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும். எனினும், தேவைப்பட்டால், சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்படலாம். கோரிக்கையின் பேரில் நடத்தப்படும் கூட்டம், அதற்கான கோரிக்கை தலைமையாளர் / தலைவருக்கு வரப்பெற்ற ஏழு நாள்களுக்குள் நடத்தப்பட வேண்டும்.

(2) கூட்டத்திற்கான அறிவிப்பு நேரில் அஞ்சல் மூலம் / தனிநபர் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது அறிவிப்பு பலகையில் ஒட்டி வைக்கப்பட வேண்டும். டாம - டாம் அடிப்பதன் மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

(3) தலைமையாளர் / தலைவர் நிருவாகக் குழு கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வேண்டும். அவர் இல்லாத நேரத்தில் நிருவாகக் குழு தங்களுக்குள் ஒருவரை இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க தேர்ந்தெடுக்கலாம்.

(4) நிருவாகக் குழுவின் ஒவ்வொரு நடவடிக்கையும் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குபவரால் அதற்கெனப் பராமரிக்கப்பட்டு வரும் நடவடிக்கை குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். நடவடிக்கைக் குறிப்பின் நகல் ஒன்று அடுத்த உயரதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(5) கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு ஆகும். வந்திருந்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினர் வாக்களிப்பதன் மூலம் தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும்.

(6) கூட்டத்திற்கான குறைவெண், வரம்பு இல்லாவிட்டால் கூட்டம் ஒத்திவைக்கப்படவேண்டும். கூட்டத்திற்கு முதலில் குறிப்பிடப்பட்ட நாளுக்கு பின்னர் மூன்று நாள்களுக்கு குறையாத ஒரு நாளிலும், நேரத்திலும் இக்கூட்டம் மீண்டும் கூட்டப்பட வேண்டும்.

(7) ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்திற்கு குறைவெண் வரம்பின்படி உறுப்பினர்கள் வந்திருக்க வேண்டும் என்ற தேவையில்லை. வந்திருக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் வாக்களிப்பதன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

22. பொதுக் குழுவின் அதிகாரங்கள்

பொதுக் குழு பின்வரும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ; அதாவது:-

(1) ஒவ்வொரு பயிர் பருவப் பயிருக்குரிய செயல் முறைத் திட்டத்திற்கு ஒப்புதலளித்து செயல் திட்டப் பகுதியில் அதன் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்தல் ;

(2) ஏற்பளிக்கப்பட்ட செயல்முறைத் திட்டத்திற்கிணங்க பாசன அமைப்புகளின் பல்வேறு முதன்மை கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள், கண்ணி வாய்க்கால்கள் நேரடி மதகுகள் மற்றும் ஏனைய மதகுகள் ஆகியவற்றிடையே தண்ணீரைப் பகிர்ந்தளித்தல் ;

(3) தண்ணீரை முறைப்படுத்தி, பகிர்ந்தளிக்கும் முறையை முடிவு செய்தல் ;

(4) ஆண்டுத் திட்டங்களையும் நீண்ட கால நிதி மற்றும் பணிகள் குறித்த திட்டங்களையும் தயாரித்தல், பாசன ஏற்பாடுகளைப் பராமரித்தல் / பழுது பார்த்தல் / பேணிக்காத்தல் / சீரமைத்தல் ஆகிய பணிகளை முன்னுரிமைப் படி வரிசைப்படுத்துதல் ;

(5) ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தலும் முந்தைய ஆண்டு வரவு - செலவுத் திட்ட செயலாக்கத்தை ஆய்வு செய்தலும் ;

(6) ஆண்டுத் தணிக்கை அல்லது உடன் தணிக்கைக்கான தணிக்கையாளர்களை நியமித்து அதற்கான கட்டணங்களை நிர்ணயித்தல் ;

(7) அமைப்பின் பல்வேறு நடவடிக்கைகளையும், பணிகளையும் கவனிப்பதற்காக உறுப்பினர்களைக் கொண்ட துணைக் குழுக்களை ஏற்படுத்துதல் ;

(8) வெவ்வேறு நடவடிக்கைகள் / பணிகளுக்குத் தேவைப்படும் நிதியை உருவாக்குதல் அல்லது ஏற்படுத்துதல் ;

(9) நிருவாகக் குழுவின் ஆணைகளை எதிர்த்து நீரினைப் பயன்படுத்துவோரிடையே வரும் மேல் முறையீடுகளை விசாரித்து முடிவு செய்தல் ;

(10) சட்டத்தின் 25ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு கட்டணம் விதித்தல் ;

(11) சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் நிதியாதாரங்களைத் திரட்டுவது குறித்து முடிவு எடுத்தல், நிறுவனங்களின் பயனைக் கருதி அவ்வப்போது அரசு உத்தரவிடக்கூடியவாறு வங்கியில் அல்லது அரசு ஒப்புதல் அளித்த பிணையப் பத்திரங்களில் உபரி நிதியை முதலீடு செய்தல் ;

(12) அவ்வப்போது வரையறுக்கப்படும் உச்சவரம்புகளுக்குட்பட்டு, அனுமதிக்கத்தக்க நிருவாகச் செலவுகள் குறித்து முடிவு செய்தல் ;

(13) சட்டத்தின் 13ஆம் பிரிவின்படி மீண்டும் அழைக்கும் செயல்முறை ஆணைகளை நிறைவேற்றுதல்.

23. செயல்முறைத் திட்டமும் தண்ணீர் குறித்த திட்டமிடலும்

(1). சம்பந்தப்பட்ட விவசாயிகள் அமைப்பின் நிருவாகக் குழு தகுதிவாய்ந்த அதிகாரியின் உதவியுடன் அதன் கட்டுப்பாட்டின் கீழ் வரும் செயல்பாட்டுப் பகுதிக்கு தண்ணீர்த் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

(i) பாசன பருவம் தொடங்குவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன் திட்டக் குழு, அவ்வப்போது அரசு பிறப்பிக்கக்கூடிய உத்தரவுகளுக்கு உட்பட்டு நீர்த்தேக்கத்திற்கு எதிர்பார்க்கப்படும் நீர்வரத்தையும், அதில் தற்போது இருக்கும் நீரின் அளவையும் கணக்கிட்டு அனைத்து பகிர்மானக் குழுக்களுக்கும் ஒதுக்கப்படும் தண்ணீரின் அளவைக் கணக்கிட வேண்டும். பகிர்மானக் குழு, அதற்கு ஒதுக்கப்பட்ட தண்ணீரை, அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியிலுள்ள நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(ii) ஓர் விவசாயிகள் அமைப்பு, அதன் உறுப்பினர்களுக்குத் தண்ணீரைப் பகிர்ந்தளிக்கும்போது குடிநீருக்கான ஒதுக்கீடுகளை அல்லது அரசு அவ்வப்போது முடிவு செய்யக்கூடிய குறிப்பிட்ட எந்தவொரு நோக்கத்திற்கான ஒதுக்கீடுகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

(iii) இரண்டாம் போகப் பருவத்திற்கு, திட்டக் குழு, இரண்டாவது போகப் பருவத் தொடக்கத்தில் இருக்கும் தண்ணீரின் அளவை அடிப்படையாகக் கொண்டு எவ்வளவு பரப்பிற்குப் பாசனம் அளிப்பது என்பதை முடிவு செய்ய வேண்டும். அவ்வாறு இருக்கும் தண்ணீர் பகிர்மானக் குழுக்களிடையே சமமாகப் பகிர்ந்து ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(iv) ஒவ்வொரு விவசாயிகள் அமைப்பும் செயல்முறைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும். அத்திட்டத்தில் பதினைந்து நாள்களுக்கொருமுறை வெளிவிடக்கூடிய தண்ணீரின் அளவை திட்டவட்டமாகக் குறிப்பிடவேண்டும்.

(v) விவசாயிகள் அமைப்பு முடிவு செய்கிறபடி, குறிப்பிட்ட அளவீட்டு பகுதிகளின் ஒவ்வொரு நாளும் வெளிவிடப்படும் தண்ணீர் அளவு கண்காணிக்கப்பட வேண்டும்.

(vi) ஒவ்வோர் விவசாயிகள் அமைப்பும், பதினைந்து நாள்களின் முடிவிலும் வெளிவிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்ட தண்ணீரின் அளவை ஆய்வு செய்து, தக்க சரி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(vii) ஒவ்வொரு பருவகால இறுதியிலும், சம்பந்தப்பட்ட விவசாயிகள் அமைப்பு பாசனம் செய்யப்பட்ட பரப்பு, வழங்கப்பட்ட தண்ணீரின் அளவு, பயிரிடப்பட்ட பரப்பளவு ஆகியவற்றுடன் வரப்பெற்று பயன்படுத்தப்பட்ட தண்ணீரின் அளவு பற்றிய அறிக்கை ஒன்றையும் தயாரிக்க வேண்டும்.

(viii) விவசாயிகள் அமைப்பு தண்ணீர்த் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள், பிறழ்வுகள் குறித்து பகுப்பாய்வு செய்து அடுத்த உயர் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ix) சிறு பாசன அமைப்பு முறையைப் பொறுத்த வரையில், செயல் திட்டம், பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடும் நாள், ஏரியில் நீர் இருப்பு அளவு / நீர்வரத்து அளவு ஆகியவற்றின் அடிப்படையில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் தீர்மானிக்க வேண்டும்.

24. நீரை முறைப்படுத்துதல்

(1) நீர் செயற்பாட்டுத் திட்டம் (Water Budget) ஒன்றைத் தயாரித்த பின்னர், நீரை முறைப்படுத்தும் திட்டம் ஒன்றை, பின்வரும் வகையில் விவசாயிகள் அமைப்பு வகுக்க வேண்டும்.

(a) பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்படும் நாள் மற்றும் மூடப்படும் நாள் குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்;

(b) நீரினைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும் சமச்சீரான வீதத்தில் நீரினைப் பங்கிட்டளிப்பதே நீர் முறைப்படுத்துதல் திட்டத்தின் முக்கிய கோட்பாடாக இருக்க வேண்டும்;

(c) விவசாயிகள் அமைப்பு தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் அடிப்படையில், தண்ணீர் திறந்து விடவும், தண்ணீர் வரத்து அளவைக் கண்காணிக்கவும் வேண்டும்;

(d) விவசாயிகள் அமைப்பு ஒன்றின் கீழ் வரும் ஒவ்வொரு மதகுக்கென்றும் தனித்தனியான நீர் வழங்கு சுழற்சி முறைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்;

(e) விவசாயிகள் அமைப்பு, வேளாண்மை மற்றும் வருவாய்த் துறைப் பணியாளர்களுடன் இணைந்து, தகுதிவாய்ந்த அதிகாரியின் உதவியுடன் நீர்ப்பாசனப் பகுதியின் பராமரிப்புப் பணியை (Azmoish) மேற்கொள்ள வேண்டும், மற்றும்;

(f) விவசாயிகள் அமைப்பு கண்காணிப்பதற்கென்று அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில், நீர் வரத்து குறித்து கண்காணிக்கவும் தகவல்களைப் பதிவு செய்யவும் தேவையான சாதனங்களை நிறுவலாம்.

25. **கட்டணங்கள் விதித்தலும் வசூலித்தலும்**: (1) விவசாயிகள் அமைப்பு துணை விதி (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு திட்டவட்டமான செயல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, நீரினைப் பயன்படுத்துபவர் ஒவ்வொருவருக்கும், எக்டேர் ஒன்றிற்கு, ஆண்டொன்றிற்கு ரூபாய் இருநூற்று ஐம்பது முதல் ஐநூறு ரூபாய் வரையில் கட்டணம் விதிக்கலாம்.

(2) கட்டணம் விதிப்பதற்கான நோக்கம் வருமாறு:-

(a) நீராதார அமைப்பிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட பாசன அமைப்பு முறையை இயக்குதல் மற்றும் பராமரித்தல்

(b) அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்

(c) திட்டவட்டமான பணிகளை ஆற்றுதல்

(d) விவசாயிகள் அமைப்பின் அவசரத் தேவைகளை நிறைவு செய்தல்

(e) விவசாயிகள் அமைப்பிற்காகச் சொத்துக்களை ஏற்படுத்துதல்; மற்றும்

(f) பாசன ஏற்பாட்டை மேம்படுத்துதல்.

(3) நில உடைமையின் அளவு, அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையிலும், கேட்பு அறிவிப்பு மூலமும் நிருவாகக் குழு கட்டணம் விதிக்கலாம்.

(4) வசூலிக்கப்படும் அனைத்துக் கட்டணங்களுக்கும் முறையான பற்றுச் சீட்டுகள் அளிக்கப்பட்டு உரியவாறு கணக்கு வைத்து வரப்பட வேண்டும்.

(5) குறிப்பிட்டதொரு நோக்கத்திற்காக வசூலிக்கப்படும் கட்டணம், அந்தக் குறிப்பிட்ட நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

(a) ஓர் விவசாயிகள் அமைப்பு, விதித்த அத்தகைய கட்டணத்தை உறுப்பினர் ஒருவர் செலுத்தத் தவறினால் அவ்வாறு தொகை செலுத்தத் தவறியவர்கள், அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை நிருவாகக் குழு தயாரிக்க வேண்டும்.

(b) மேலே (a) பகுதியின் கீழ் இவ்வாறு தயாரிக்கப்பட்ட தொகையைச் செலுத்தத் தவறியவர்களின் பட்டியல், சட்டத்தின் 39ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளவாறு அத்தொகையை வசூலிப்பதற்காக விவசாயிகள் அமைப்பின் பணிகள் எந்த வட்டாட்சியரின் அதிகார வரம்பிற்குள் வருகிறதோ, அந்த வட்டாட்சியரிடம் அளிக்க வேண்டும். தொகை செலுத்தத் தவறியவர்களின் பட்டியலின் நகல் ஒன்று, மாவட்ட ஆட்சியருக்கும் அளிக்கப்பட வேண்டும்.

26. **அரசிடமிருந்து கிடைக்கும் மானியங்கள்**

வசூலிக்கப்பட்ட தண்ணீர்த் தீர்வைகளின் பங்கு மற்றும் விவசாயிகள் அமைப்பின் நிதி ஆதாரங்களை உயர்த்துவதற்கான ஏனைய யாதொரு மானியங்கள் தொடர்பான தகவல் அப்போதைக்கப்போதே மாநில அரசால் அறிவிக்கப்பட வேண்டும்.

27. **கணக்குகள் / நிதி**

(1) விவசாயிகள் அமைப்பு, அதன் பெயரில் நாட்டுடைமையாக்கப்பட்ட யாதொரு வங்கியில் அல்லது கூட்டுறவு வங்கியில் அல்லது வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கணக்கு ஒன்றைத் தொடங்கி, அக்கணக்கினை தலைவர் / தலைமையாளர் மற்றும் நிருவாகக் குழுவால் நியமிக்கப்படும் நிருவாகக் குழுவின் உறுப்பினர் ஒருவர் ஆகியோர் இணைந்து இயக்கி வர வேண்டும். விவசாயிகள் அமைப்பு ரொக்கப்புத்தகம் மற்றும் செலவுக் கணக்கை உரிய கைச்சாத்துக்கள் மற்றும் பற்றுச் சீட்டுக்களுடன் வைத்து வர வேண்டும்.

(2) ஒவ்வொரு செலவுக்கும், அது தொடர்பான பற்றுச்சீட்டு அல்லது கைச்சாத்து ஆகிய ஆதாரம் இருக்க வேண்டும். அவற்றிற்கான தொகை வழங்குவதற்குரிய அனுமதியை, தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் ஒருவர் உரியவாறு வழங்க வேண்டும்.

(3) அனைத்துச் செலவுகளுக்கும் குறைந்தது மாதத்தில் ஒருமுறையேனும், நிதி மற்றும் ஆதாரங்கள் துணைக்குழு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(4) விவசாயிகள் அமைப்பு ஒவ்வொன்றும், கணக்குப் பதிவேடு வைத்து வர வேண்டும். பின்வரும் ஆவணம் ஒவ்வொன்றிலும் விவசாயிகள் அமைப்பின் பெயரும், முகவரியும் குறிப்பிடப்பட்டு முத்திரை பதிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், எண்பொறியைக் கொண்டு எண்ணிடப்பட்டிருக்க வேண்டும், அவையாவன ;

(a) ரொக்கப் புத்தகம்

(b) பட்டிப் பதிவேடுகள்

(c) சில்லறைச் செலவு குறித்த பதிவேடுகள்

(d) அனாமத்துக் கணக்குப் பதிவேடு (Day Book)

(e) பற்றுச் சீட்டு புத்தகம் மற்றும்

(f) காசோலைப் பதிவேடு

28. விவசாயிகள் அமைப்பின் சமூகத் தணிக்கை (Social Audit)

ஒவ்வொரு பயிர் பருவத்தின் முடிவிலும், விவசாயிகள் அமைப்பு கீழே விவரிக்கப்பட்டவாறு சமூகத் தணிக்கையை மேற்கொள்ள வேண்டும் :

(1) நிருவாகக் குழு வழக்கமான தணிக்கைப் பணியில் போதிய அனுபவமுள்ள தணிக்கையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

(2) பயன்பாட்டுத் திட்டத்தோடு ஒப்பிடுகையில், தண்ணீர் பயன்பாட்டளவையும் ஒவ்வொரு விவசாயிகள் அமைப்பிடமும் உள்ள நிதியளவு, அதில் பாசன அமைப்பை பராமரிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை ஆகியவற்றையும் சமூகத் தணிக்கை செய்ய வேண்டும்.

(3) சமூகத் தணிக்கையில் பின் வருபவை அடங்கும்:-

(a) நீரைச் சமமாகப் பகிர்ந்தளித்தல்

(b) உற்பத்தி அதிகரிப்பு

(c) உற்பத்தித் திறன் அதிகரிப்பு

(d) பயிர் சாகுபடியைப் பல்திறப்படுத்தல்

(e) பல்வகைப் பயிர் சாகுபடி

(f) நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல்

(g) பணிகளை நிறைவேற்றுவதற்காக, ஆதாரங்களைப் பயன்படுத்தல்

(h) முந்தைய பருவத்துடன் ஒப்பிடுகையில் உழவர் அமைப்பின் மூலம் பயிரிடப்படும் பரப்பளவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்

(i) மேற்கொண்ட பணிகளின் தரம்

(4) செலவிடப்பட்ட தொகை அதன் மூலம் கிடைத்த பயன்கள் ஆகிய விவரங்களடங்கிய பட்டியலை விவசாயிகள் அமைப்பு ஒவ்வொன்றும் தங்களது அலுவலக அறிவிப்புப் பலகையில் வெளியிடுவதன் மூலம் விவசாயிகள் அமைப்பில் உள்ள பயனீட்டாளர்கள் அனைவருக்கும் நடத்தப்பட்ட தணிக்கைப் பற்றி தெரியப்படுத்த வேண்டும்.

(5) ஒரு பணி எடுத்துக் கொள்ளப்படும் போது, பணியின் மதிப்பீட்டுச் செலவு, நிறைவேற்றக் கருதியுள்ள பணி, பணியை நிறைவேற்றுபவர்கள் பற்றிய விவரங்கள் முதலியவை, பணியிடத்தில் ஒரு பலகையில் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும். இதனால் விவசாயிகள் அமைப்பில் உள்ள பயனீட்டாளர் ஒவ்வொருவரும், நிறைவேற்றப்பட்டு வரும் பணி மற்றும் ஏற்படக்கூடிய செலவு பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள இயலும்.

(6) தகுதி வாய்ந்த அதிகாரி சமூகத் தணிக்கை நடத்துவதற்கான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டும். வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகளும் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

(7) அவ்வாறு நடத்தப்பட்ட சமூக தணிக்கை, பதிவு செய்யப்பட்டு, அதன் ஒரு நகல், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தைப் பொறுத்த மட்டில் பகிர்மானக் குழுவுக்கும், பகிர்மானக் குழுவைப் பொறுத்த மட்டில், திட்டக் குழுவுக்கும், திட்டக் குழுவைப் பொறுத்த மட்டில் தலைமைக் குழுவுக்கும் அரசுக்கும் அனுப்ப வேண்டும்.

112-8-647—7a

(8) தணிக்கையாளர், தன்னுடைய ஆண்டுத் தணிக்கை அறிக்கையில் சமூகத் தணிக்கை அறிக்கையையும், சமூகத் தணிக்கையில் குறைபாடு ஏதேனும் காணப்பட்டால், அதனைச் சரி செய்வது பற்றிய தன்னுடைய திட்டவட்டமான கருத்துரையையும் சேர்க்க வேண்டும்.

29. நிதித் தணிக்கை: ஒவ்வொரு நிதியாண்டு முடிந்த பின்னரும், புதிய நிதியாண்டு தொடங்கி மூன்று மாதங்களுக்குள் விவசாயிகள் அமைப்பு ஒவ்வொன்றும், தன் கணக்குகளைப் பின்வருமாறு தணிக்கையிடச் செய்ய வேண்டும்:

(i) நிருவாகக் குழு வழக்கமான தணிக்கைப் பணியில் போதிய அனுபவமுள்ள தணிக்கையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

(ii) அவ்வாறு நியமிக்கப்படும் தணிக்கையாளர், விவசாயிகள் அமைப்புகள் உள்ள பகுதியில் பிரபலமானவராக இருப்பதோடு அவருக்கு கணக்குகளிலும் போதிய தகுதி இருக்க வேண்டும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளராக இருக்க வேண்டும்.

(iii) தணிக்கையாளர் நியமனத்திற்கு விவசாயிகள் அமைப்பின் நிருவாகக் குழு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(iv) அவ்வாறு நியமிக்கப்பட்ட தணிக்கையாளர், அவர் நியமிக்கப்பட்ட 30 நாள்களுக்குள் வரவு மற்றும் செலவுக் கணக்குகளை கூர்ந்தாய்வு செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து தணிக்கை அறிக்கைக்கு உரியவாறு சான்றொப்பமிட்டு, அதனை கணக்கு விவர அறிக்கை மற்றும் ஐந்தொகைக் கணக்குகளுடன் சம்பந்தப்பட்ட விவசாயிகள் சங்கத்தின் தலைவருக்கு அளிக்க வேண்டும்.

(v) தணிக்கை அறிக்கை பொதுக் குழுக் கூட்டத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட வேண்டும்.

(vi) விவசாயிகள் சங்கத்தின் நிருவாகக் குழு, தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட அனைத்து விவரங்கள் குறித்து, பொதுக் குழுவுக்கு செயலாக்க அறிக்கையை அளிக்க வேண்டும். நிருவாகக் குழு இது தொடர்பாக பொதுக் குழுவின் முடிவுகளைச் செயற்படுத்த வேண்டும்.

(vii) ஒட்டு மொத்த வரவு, செலவு ஓராண்டிற்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்டால், விவசாயிகள் அமைப்பு, பட்டயக் கணக்கர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

30. வரவு-செலவுத் திட்டம்

விவசாயிகள் அமைப்பின் நிருவாகக் குழு ஒவ்வொன்றும், ஒவ்வோராண்டும் ஏப்ரலிலிருந்து தொடங்கும் அடுத்த நிதியாண்டுக்கான அனைத்துப் பணிகள் அடங்கிய விரிவான வரவு - செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். வரவு - செலவுத் திட்ட விவரங்கள் படிவம் XIII-இல் தயாரிக்கப்பட்டு, அந்தந்த பொதுக் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும். ஒவ்வோராண்டும் பிப்ரவரி இறுதிக்குள் அவற்றிற்கு ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

31. குற்றங்களை இணக்கம் செய்வதற்கான நடைமுறை

(1) தகுதி வாய்ந்த அதிகாரி அல்லது விவசாயிகள் அமைப்பின் தலைவர், குற்றம் பற்றியதொரு அறிவிப்பை குற்றம் புரிந்தவருக்கு அளிக்க வேண்டும்.

(2) குற்றம் புரிந்த நபர் தனது தரப்பை விளக்கிக் கூற அவருக்கு நியாயமானதொரு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது நிருவாகக் குழுவின் தலைவர் அல்லது தலைமையாளர் இச் சட்டத்தின் 32-ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைத் தொகைக்கு மிகாத ஒரு தொகையை இணக்கக் கட்டணமாக நிர்ணயித்து, அதனை வசூலிக்க வேண்டும்.

(4) துணை விதி (3)-இன் படி வசூலிக்கப்பட்ட தொகைக்கு உரியவாறு ஒப்புதல் அளித்து, அதனைக் கணக்கில் காட்ட வேண்டும்.

32. வைத்து வரப்பட வேண்டிய ஆவணங்கள்

(1) விவசாயிகள் அமைப்புகள் ஒவ்வொன்றும், சட்டத்திலும், விதிகளிலும் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைத் தவிர, பின்வரும் ஆவணங்களையும் சட்டத்தின் / விதிகளின்

மற்றும் ஆணையரின் / அரசின் உத்திரவுகள் மற்றும் ஆணைகளின் நகல்களையும் நாளது வரை வைத்து வர வேண்டும்.

(2) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றும் பின்வரும் வரைபடங்களையும், பதிவேடுகளையும், வைத்து வர வேண்டும்; அதாவது:—

(i) சங்கத்தின் எல்லைகள், அதிகார வரம்பு மற்றும் சங்கத்தின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் நீர் அனுப்புகை ஏற்பாடு போன்ற விவரங்களைக் காட்டும் வரைபடங்கள் ;

(ii) அனுமதிக்கப்பட்ட / அறிவிக்கப்பட்ட ஆயக்கட்டையும், அதன் நில அளவை எண்களையும் காட்டும் வரைபடம் ;

(iii) அறிவிக்கப்பட்ட ஆயக்கட்டுப் பகுதியில் வராத நீர்ப் பாசனப் பகுதிகளைக் காட்டும் வரைபடம்; மற்றும்,

